முருகப்பெருமான் துணை

# மகான் மெய்ப்பொருள் நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**06.06.2021**, ஞாயிற்றுக்கிழமை

1. அருளாய் அறமாய் ஞானமாய்
ஆறுமுகனாரின் மகா சூட்சுமமாய்
வரம் பெற்றுவந்த ஞானியே
வள்ளலே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமைகூறி
அகிலமதில் யோகபிரசன்ன ஆசி
வரங்களென பிலவ விடைதிங்கள்
வல்லமைபட மூவேழீர்திகதி கதிர்வாரம்
(பிலவ வருடம் வைகாசி மாதம் 23ம் நாள், 06.06.2021 ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் மெய்ப்பொருள் நாயனாரும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
பாரத புண்ணிய பூமியில் துவங்கி
பாருலகையே மாற்றும் சக்தியாக
4. சக்தியாக அரங்க மகானும்
சற்குருவாக கலியில் தவழ்ந்திருக்க
சக்திமிகு அரங்க ஞானியருள்
சகலரும் சரணடைவு கொண்டுவர
5. வருகவே அரங்கன் வேண்டி
வரமாகப் பெற்ற உலகப்பெருமாற்றம்
முருகப் பெருமானால் நடந்தேறும்
முழுமையாக இந்த சரணடைவு
6. சரணடைவு உலகோர் தந்துவிட
சன்மார்க்க வழியை கண்டுவிட
பூரணமான ஞானிகள் ஆசியை
பூவுலகோர் கண்டு தேறியே
7. தேறியே ஞானவான்கள் ஆவர்
தெய்வநிலை நாளும் கூடியே
அறியாமை நீக்கி சர்வ தெளிவும்
ஆனந்தகதி நிலையும் அடைந்திடுவர்
8. அடையவே சமூகச் சீர்கேடுகள்
அனைத்தும் அரங்கன் ஞானமதால்
தடையின்றி உலகை விட்டோடி
தருமபலமிக்க சமூகமாக மாறும்
9. மாறுதல் கண்டு படிப்படியாய்
மண்ணுலகம் எங்கும் தருமம்பரவி
ஆறுமுகன் ஆசிபெற்ற பூமியாகி
ஆக்கமும் நல்ல பாதுகாப்பும் அடையும்

10. அடையவே கலித் துன்பமான
ஆளுமை வழி சுய லாபங்களும்
சோடையான ஊழலும் விலகி
சுத்தமான ஞான ஆட்சியாக மாறும்

11. மாறுதல் தரும் மகா சக்தியும்
மரணம் வெல்லும் அவதார
ஆறுமுக அரங்கனே கலியின் சிறந்த குரு
அகிலமே வணங்க சடுதி மாற்றம்பெறும்

யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–